©
GOVERNMENT OF TAMIL NADU
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 6.40 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 19A] சென்னை, வியாழக்கிழமை, ஜனவரி 13, 2011
மார்கழி 29, திருவள்ளுவர் ஆண்டு — 2041

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

### பொருளடக்கம்

*பக்கங்கள்.*

**சட்டமுன்வடிவுகள்:**

எண் 2/2011—சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டம் .. .. 2–3
எண் 3/2011—தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டம் .. 5–15

2011 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 13–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க–காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2011**

***1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம், 2011–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2010–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 21–ஆம் நாளன்றே நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

5–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் IV/1919.

**2.** (இதன்பின்பு முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் 5–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில், ''நூற்று ஐம்பத்தைந்து'' என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''இருநூறு'' எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

45–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**3.** முதன்மைச் சட்டத்தின் 45–ஆம் பிரிவில்,—

(i) ஓரத் தலைப்பிற்குப் பதிலாக, பின்வரும் ஓரத் தலைப்பானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''இருநூறு கோட்டங்கள்.'';

(ii) (1)–ஆம் உட்பிரிவில், இரு இடங்களில் வருகின்ற ''நூற்று ஐம்பத்தைந்து'' எனும் சொற்றொடருக்குப் பதிலாக, ''இருநூறு'' எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

46.AAA எனும் புதிய பிரிவைப் புகுத்துதல்.

**4.** முதன்மைச் சட்டத்தின் 46–AA எனும் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:-

''46—AAA. *தனி வகைமுறைகள்.*— இந்தச் சட்டத்திலோ அல்லது இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகளிலோ அல்லது வெளியிடப்பட்ட ஆணைகளிலோ என்ன அடங்கியிருந்த போதிலும், மாநகரக் கோட்டங்களின் நிலவரைப் பகுதி, கோட்டங்களின் மொத்த எண்ணிக்கை, மன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை ஆகியன, 2011–ஆம் ஆண்டு நடைபெறவிருக்கிற வழக்கமான தேர்தல் வரையிலும் 2011–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டம் தொடங்குவதற்கு முன்பு இருந்தவாறான அதே நிலையில் அமைந்திருத்தல் வேண்டும்.''.

48–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**5.** முதன்மைச் சட்டத்தின் 48–ஆம் பிரிவில்,—

(i). (1)–ஆம் உட்பிரிவில், ''நூற்று ஐம்பத்தைந்து'' என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''இருநூறு'' எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii). (2)–ஆம் உட்பிரிவில், ''நூற்று ஐம்பத்தைந்து'' என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''இருநூறு'' எனும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

நீக்கமும் காப்பும்.

தமிழ்நாடு அவசரச் சட்டம் 8/2010.

**6.** (1) 2010–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) அவசரச் சட்டமானது இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகின்றது.

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்ற போதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ இந்தச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மை சட்டத்தின்படி செய்யப்பட்டுள்ளதாகவோ அல்லது எடுக்கப்பட்டுள்ளதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

**நோக்க–காரண விளக்கவுரை**

அரசானது, சென்னை மாநகரை அடுத்துள்ள நாற்பத்திரண்டு உள்ளாட்சி அமைப்புகளைச் சேர்ப்பதன் மூலம் சென்னை மாநகராட்சியின் எல்லைகளை விரிவாக்குவதென முடிவு செய்துள்ளது. மேற்சொன்னவாறு உள்ளாட்சி அமைப்புகளைச் சேர்ப்பதன் அடிப்படையில் சென்னை மாநகராட்சிக்கு நடத்தப்படவிருக்கிற, அடுத்த வழக்கமான தேர்தலுக்காகச் சிற்றொகுதிகள் (கோட்டங்கள்) சீரமைப்பு செய்யப்படும். மேற்சொன்ன விரிவாக்கத்தின் பொருட்டு, அரசானது, சென்னை மாநகராட்சிக்கான சிற்றொகுதிகளின் (கோட்டங்களின்) மொத்த எண்ணிக்கையை இருநூறு என்பதாக நிர்ணயிப்பதென முடிவு செய்துள்ளது. அதன் விளைவாக, 1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம்IV/1919) சிற்றொகுதிகளின் (கோட்டங்களின்) எண்ணிக்கையைச் சுட்டுகிற வகையில் அமைந்த ஒருசில வகைமுறைகள் திருத்தப்படுவது தேவையானதாகிறது. எனவே, அரசானது 1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் IV/1919) மேற்சொன்ன நோக்கத்திற்காகத் தக்கவாறு திருத்துவதென முடிவு செய்துள்ளது. அதற்கிணங்கிய வகையில் 2010–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) அவசரச்சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 8/2010) 2010–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20–ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டு, அது, 2010–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 21–ஆம் தேதியிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** சிறப்பிதழில் வெளியிடப்பட்டது.

2. இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அமைய விழைகிறது.

**மு.க. ஸ்டாலின்,**
*துணை முதலமைச்சர்.*

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

2011 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 13—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க—காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2011**

***தமிழ்நாடு மாநிலத்திலுள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் தொடர்பான சட்டங்களை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**பகுதி I.**

**முன்னுரை.**

**1.** (1) இந்தச் சட்டம் 2011—ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**பகுதி II.**

**1919—ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தங்கள்.**

தமிழ்நாடு சட்டம் IV/1919.

**2.** (இதன் பின்பு இந்தப் பகுதியில் 1919—ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1919—ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் 326—A எனும் பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:— 326—A எனும் பிரிவுக்கு பதிலாக அமைத்தல்.

**“326-A. பொருள் வரையறைகள்.–** இந்த அத்தியாயத்தில்,—

(a) "விளம்பரப் பலகை" என்றால் பொது இடமோ அல்லது தனியார் இடமோவான இடம் எதிலும் உள்ள நிலம், கட்டிடம், சுவர் அல்லது கட்டுமானம் எதனின் மீதும் முழுவதுமோ அல்லது ஒரு பகுதியோ நிறுவியமைக்கப்பட்டுள்ளதும், முழுமையாக அல்லது பகுதியாக பொது மக்களின் கண்களுக்குப் புலப்படத்தக்க வகையிலான, சட்டவேலைப்பாடு அல்லது பிற தாங்குப் பொருள் உள்ளடங்கலான விளம்பரத்தைக் காட்சிக்கு வைப்பதற்காகப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தக் கருதப்படும் மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை மற்றும் விளம்பர அட்டைகள் அல்லாத பிற பலகைத் தட்டிகள் எனப் பொருள்படும்.

(b) "மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை" என்றால் பொது இடமாகவோ அல்லது தனியார் இடமாகவோவான இடம் எதிலும் விளம்பரம் எதனையுமோ அல்லது திருமணம், சமயச் சடங்கு, பிறந்தநாள் அல்லது இறந்த நாள் குறித்த ஆண்டு விழா, அரசியல், சமய அல்லது சமுதாய நிறுவனத்தின் கூட்டம் அல்லது மாநாடு தொடர்பான தகவல் எதனையுமோ காட்சிக்கு வைப்பதற்காகப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தக் கருதப்படும், மின்னணு அச்சுத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி வடிவமைத்து அச்சடிக்கப்பட்ட பலகைத் தட்டிகள் எவையும் எனப் பொருள்படும்;

(c) "விளம்பர அட்டை" என்றால், பொது இடமாகவோ அல்லது தனியார் இடமாகவோவான இடம் எதிலும் விளம்பரம் எதனையுமோ அல்லது திருமணம், சமயச் சடங்கு, பிறந்தநாள் அல்லது இறந்த நாள் குறித்த ஆண்டு விழா, அரசியல், சமய அல்லது சமுதாய நிறுவனத்தின் கூட்டம் அல்லது மாநாடு தொடர்பான தகவல் எதனையுமோ காட்சிக்கு வைப்பதற்காகப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தக் கருதப்படும், மின்னணு அச்சுத்

தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி வடிவமைத்து அச்சடிக்கப்பட்ட, எட்டு அடி உயரம் நான்கு அடி அகலத்திற்கு மேற்படாத அளவிலான பலகைத் தட்டிகள் எவையும் எனப்பொருள்படும்.''.

326-BB எனும் புதிய பிரிவை புகுத்துதல்.

**3.** 1919-ஆம் ஆண்டுச் சட்டத்தின் **326–B** எனும் பிரிவுக்குப் பின்பு பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

***"326-BB. மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகைகளையும் விளம்பர அட்டைகளையும் நிறுவியமைப்பதை முறைப்படுத்துதல்.***—

(1) மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை அல்லது விளம்பர அட்டை எதுவும், நபர் எவராலும் மாவட்ட ஆட்சியரின் முன் அனுமதி பெறாமல் ஆறு நாள்கள் என்பதான கால அளவுக்கு மேற்படாததொரு கால அளவு ஒன்றுக்கு, விளம்பரம் அல்லது தகவல் எதனையும் காட்சிக்கு வைப்பதற்கு நிறுவியமைக்கப்படுதல் கூடாது.

(2) (1)–ஆம் உட்பிரிவின்படியான அனுமதிக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய படிவத்திலும் அத்தகைய விவரங்களைக் கொண்டதாகவும் அத்தகைய கட்டணத்துடனும், மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை அல்லது விளம்பர அட்டை நிறுவப்படும் தேதிக்கு பதினைந்து நாள்களுக்கு முன்னதாக மாவட்ட ஆட்சியரிடம் எழுத்துருவில் செய்யப்படுதல் வேண்டும்.

(3) மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை அல்லது விளம்பர அட்டை நிறுவியமைப்பதற்கான அனுமதியானது மாவட்ட ஆட்சியரால் குறிப்பிடப்படக்கூடிய அத்தகைய நோக்கத்திற்காக ஆறு நாள்கள் என்பதான கால அளவுக்கு மேற்படாத அத்தகைய கால அளவிற்கு அத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு வழங்கப்படலாம்.

(4) மாவட்ட ஆட்சியர், எழுத்துருவில் பதிவு செய்யப்படவேண்டிய காரணங்களுக்காக அனுமதி வழங்க மறுக்கலாம்.

(5) அனுமதியைப் பெற்றதற்குப் பின்னர் மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை அல்லது விளம்பர அட்டை நிறுவியிருக்கிற ஒவ்வொரு நபரும், அத்தகைய அனுமதி முடிவுற்றதன் பேரில் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் மக்கள் நல்வாழ்விற்கும் சுற்றுச்சூழலுக்கும் இன்னல் எதுவும் ஏற்படாத வகையில் அதனை அகற்றி அழித்தல் வேண்டும்.

326-E எனும் பிரிவுக்குப் பதிலாக அமைத்தல்.

**4.** 1919–ஆம் ஆண்டுச் சட்டத்தின் **326-E** எனும் பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

***"326–E. அதிகாரமளிக்கப்படாத விளம்பரப் பலகை, மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை அல்லது விளம்பர அட்டை அகற்றப்படுதல்.***—உரிமம் ஒன்று இல்லாமல், நிறுவியமைக்கப்பட்ட விளம்பரப் பலகை எதுவும் அல்லது அனுமதி ஒன்று இல்லாமல் நிறுவியமைக்கப்பட்ட மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை அல்லது விளம்பர அட்டை எதுவும், அறிவிப்பு எதுவும் கொடுக்காமலேயே மாவட்ட ஆட்சியரால் பறிமுதல் செய்யப்பட்டு அகற்றப்படுதல் வேண்டும்.".

326-G எனும் பிரிவுக்கான திருத்தம்.

**5.** 1919–ஆம் ஆண்டுச் சட்டத்தின் **326-G** எனும் பிரிவில் "விளம்பரப் பலகை" எனும் சொற்றொடர் வருகின்ற நான்கு இடங்களிலும் "விளம்பரப் பலகை அல்லது மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை அல்லது விளம்பர அட்டை" எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

326-H எனும் பிரிவுக்கான திருத்தம்.

**6.** 1919–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 326–H எனும் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில், ''உரிமமொன்றைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல்'' என்று வருகின்ற சொற்றொடருக்குப் பின்பு, ''அல்லது அனுமதி வழங்க மறுக்கிற'' என்னும் சொற்றொடரானது புகுத்தப்படுதல் வேண்டும்.

**7.** 1919–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 326-I எனும் பிரிவுக்குப் பின்வரும் வரம்புரையானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:— 326-I எனும் பிரிவுக்கான திருத்தம்.

**“வரம்புரை:** ஆனால், மாவட்ட ஆட்சியரின் அனுமதி இல்லாமல் மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை அல்லது விளம்பர அட்டை எதனையும் நிறுவியமைக்கிற எவரொருவரும் ஓர் ஆண்டுக்கு நீட்டிக்கக்கூடிய ஒரு கால அளவிற்கான சிறைத் தண்டனையோ அல்லது ஐந்தாயிரம் ரூபாய் வரை போகக்கூடிய பணத் தண்டனையையோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.”.

**8.** 1919–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 326-J எனும் பிரிவில்,— 326-J எனும் பிரிவுக்கான திருத்தம்.

(1) ஓரத்தலைப்பில் “விளம்பரப் பலகைகள்” என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக “விளம்பரப் பலகைகள், மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகைகள் அல்லது விளம்பர அட்டைகள்” எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) 326–J எனும் பிரிவானது, அந்தப் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவாக மறு எண்ணிடப்படுதல் வேண்டும்;

(3) அவ்வாறு மறு எண்ணிடப்பட்ட (1)–ஆம் உட்பிரிவுக்கு பின்பு பின்வரும் உட்பிரிவானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

“(2) தெருவிலுள்ள போக்குவரத்தில் உள்ளவர்களின் கண்களுக்குப் புலப்படத்தக்க வகையில், மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை அல்லது விளம்பர அட்டை எதனையும் நிறுவி அமைத்ததானது, தாராளமான மற்றும் பாதுகாப்பான போக்குவரத்து ஓட்டத்தைப் பாதகமாகப் பாதிக்கும் வகையில் பாதுகாப்பான போக்குவரத்து இயக்கத்திற்கு இன்னலையும் இடையீட்டினையும் ஏற்படுத்துவதாக இருக்கிறது என மாவட்ட ஆட்சியர் நிறைவுறுவாரானால், அவர் 326-BB எனும் பிரிவின்படியான அனுமதியை வழங்குதல் கூடாது.”.

## பகுதி III.

## 1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

தமிழ்நாடு சட்டம் 15/1971. **9.** (இதன் பின்பு இந்தப் பகுதியில் 1971–ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் 410–A எனும் பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:— 410-A எனும் பிரிவுக்கு பதிலாக அமைத்தல்.

***“410-A. பொருள் வரையறைகள்.–*** இந்த அத்தியாயத்தில்,–

(a) ‘‘விளம்பரப் பலகை’’ என்றால் பொது இடமோ அல்லது தனியார் இடமோவான இடம் எதிலும் உள்ள நிலம், கட்டிடம், சுவர் அல்லது கட்டுமானம் எதனின் மீதும் முழுவதுமோ அல்லது ஒரு பகுதியோ நிறுவியமைக்கப்பட்டுள்ளதும், முழுமையாக அல்லது பகுதியாக பொது மக்களின் கண்களுக்குப் புலப்படத்தக்க வகையிலான, சட்டவேலைப்பாடு அல்லது பிற தாங்குப் பொருள் உள்ளடங்கலான விளம்பரத்தைக் காட்சிக்கு வைப்பதற்காகப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தக் கருதப்படும் மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை மற்றும் விளம்பர அட்டைகள் அல்லாத பிற பலகைத் தட்டிகள் எனப் பொருள்படும்.

(b) ‘‘மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை’’ என்றால் பொது இடமாகவோ அல்லது தனியார் இடமாகவோவான இடம் எதிலும் விளம்பரம் எதனையுமோ அல்லது திருமணம், சமயச் சடங்கு, பிறந்தநாள் அல்லது இறந்த நாள் குறித்த ஆண்டு விழா, அரசியல், சமய அல்லது சமுதாய நிறுவனத்தின் கூட்டம் அல்லது மாநாடு தொடர்பான தகவல் எதனையுமோ காட்சிக்கு வைப்பதற்காகப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தக் கருதப்படும், மின்னணு அச்சுத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி வடிவமைத்து அச்சடிக்கப்பட்ட பலகைத் தட்டிகள் எவையும் எனப் பொருள்படும்;

(c) ''விளம்பர அட்டை'' என்றால், பொது இடமாகவோ அல்லது தனியார் இடமாகவோவான இடம் எதிலும் விளம்பரம் எதனையுமோ அல்லது திருமணம், சமயச் சடங்கு, பிறந்தநாள் அல்லது இறந்த நாள் குறித்த ஆண்டு விழா, அரசியல், சமய அல்லது சமுதாய நிறுவனத்தின் கூட்டம் அல்லது மாநாடு தொடர்பான தகவல் எதனையுமோ காட்சிக்கு வைப்பதற்காகப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தக் கருதப்படும், மின்னணு அச்சுத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி வடிவமைத்து அச்சடிக்கப்பட்ட, எட்டு அடி உயரம் நான்கு அடி அகலத்திற்கு மேற்படாத அளவிலான பலகைத் தட்டிகள் எவையும் எனப்பொருள்படும்.".

410-BB எனும் புதிய பிரிவை புகுத்துதல்.

**10.** 1971-ஆம் ஆண்டுச் சட்டத்தின் 410–B எனும் பிரிவுக்குப் பின்பு பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

"**410-BB.** ***மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகைகளையும் விளம்பர அட்டைகளையும் நிறுவியமைப்பதை முறைப்படுத்துதல்.—***

(1) மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை அல்லது விளம்பர அட்டை எதுவும், நபர் எவராலும் மாவட்ட ஆட்சியரின் முன் அனுமதி பெறாமல் ஆறு நாள்கள் என்பதான கால அளவுக்கு மேற்படாததொரு கால அளவு ஒன்றுக்கு, விளம்பரம் அல்லது தகவல் எதனையும் காட்சிக்கு வைப்பதற்கு நிறுவியமைக்கப்படுதல் கூடாது.

(2) (1)-ஆம் உட்பிரிவின்படியான அனுமதிக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய படிவத்திலும் அத்தகைய விவரங்களைக் கொண்டதாகவும் அத்தகைய கட்டணத்துடனும், மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை அல்லது விளம்பர அட்டை நிறுவப்படும் தேதிக்கு பதினைந்து நாள்களுக்கு முன்னதாக மாவட்ட ஆட்சியரிடம் எழுத்துருவில் செய்யப்படுதல் வேண்டும்.

(3) மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை அல்லது விளம்பர அட்டை நிறுவியமைப்பதற்கான அனுமதியானது மாவட்ட ஆட்சியரால் குறிப்பிடப்படக்கூடிய அத்தகைய நோக்கத்திற்காக ஆறு நாள்கள் என்பதான கால அளவுக்கு மேற்படாத அத்தகைய கால அளவிற்கு அத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு வழங்கப்படலாம்.

(4) மாவட்ட ஆட்சியர், எழுத்துருவில் பதிவு செய்யப்படவேண்டிய காரணங்களுக்காக அனுமதி வழங்க மறுக்கலாம்.

(5) அனுமதியைப் பெற்றதற்குப் பின்னர் மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை அல்லது விளம்பர அட்டை நிறுவியிருக்கிற ஒவ்வொரு நபரும், அத்தகைய அனுமதி முடிவுற்றதன் பேரில் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் மக்கள் நல்வாழ்விற்கும் சுற்றுச்சூழலுக்கும் இன்னல் எதுவும் ஏற்படாத வகையில் அதனை அகற்றி அழித்தல் வேண்டும்.".

410-E எனும் பிரிவுக்குப் பதிலாக அமைத்தல்.

**11.** 1971–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 410-E எனும் பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"**410–E.** ***அதிகாரமளிக்கப்படாத விளம்பரப் பலகை, மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை அல்லது விளம்பர அட்டை அகற்றப்படுதல்.***—உரிமம் ஒன்று இல்லாமல், நிறுவியமைக்கப்பட்ட விளம்பரப் பலகை எதுவும் அல்லது அனுமதி ஒன்று இல்லாமல் நிறுவியமைக்கப்பட்ட மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை அல்லது விளம்பர அட்டை எதுவும், அறிவிப்பு எதுவும் கொடுக்காமலேயே மாவட்ட ஆட்சியரால் பறிமுதல் செய்யப்பட்டு அகற்றப்படுதல் வேண்டும்.".

410-G எனும் பிரிவுக்கான திருத்தம்.

**12.** 1971–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 410-G எனும் பிரிவில் "விளம்பரப் பலகை" எனும் சொற்றொடர் வருகின்ற நான்கு இடங்களிலும் "விளம்பரப் பலகை அல்லது மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை அல்லது விளம்பர அட்டை" எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

**13.** 1971–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 410–H எனும் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில், ''உரிமமொன்றைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல்'' என்று வருகின்ற சொற்றொடருக்குப் பின்பு, ''அல்லது அனுமதி வழங்க மறுக்கிற'' என்னும் சொற்றொடரானது புகுத்தப்படுதல் வேண்டும். 410-H எனும் பிரிவுக்கான திருத்தம்.

**14.** 1971–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 410-I எனும் பிரிவுக்குப் பின்வரும் வரம்புரையானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:— 410-I எனும் பிரிவுக்கான திருத்தம்.

**"வரம்புரை:** ஆனால், மாவட்ட ஆட்சியரின் அனுமதி இல்லாமல் மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை அல்லது விளம்பர அட்டை எதனையும் நிறுவியமைக்கிற எவரொருவரும் ஓர் ஆண்டுக்கு நீட்டிக்கக்கூடிய ஒரு கால அளவிற்கான சிறைத் தண்டனையோ அல்லது ஐந்தாயிரம் ரூபாய் வரை போகக்கூடிய பணத் தண்டனையையோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.".

**15.** 1971–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 410-J எனும் பிரிவில்,— 410-J எனும் பிரிவுக்கான திருத்தம்.

(1) ஓரத்தலைப்பில் "விளம்பரப் பலகைகள்" என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக "விளம்பரப் பலகைகள், மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகைகள் அல்லது விளம்பர அட்டைகள்" எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) 410–J எனும் பிரிவானது, அந்தப் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவாக மறு எண்ணிடப்படுதல் வேண்டும்;

(3) அவ்வாறு மறு எண்ணிடப்பட்ட (1)–ஆம் உட்பிரிவுக்கு பின்பு பின்வரும் உட்பிரிவானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"(2) தெருவிலுள்ள போக்குவரத்தில் உள்ளவர்களின் கண்களுக்குப் புலப்படத்தக்க வகையில், மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை அல்லது விளம்பர அட்டை எதனையும் நிறுவி அமைத்ததானது, தாராளமான மற்றும் பாதுகாப்பான போக்குவரத்து ஓட்டத்தைப் பாதகமாகப் பாதிக்கும் வகையில் பாதுகாப்பான போக்குவரத்து இயக்கத்திற்கு இன்னலையும் இடையீட்டினையும் ஏற்படுத்துவதாக இருக்கிறது என மாவட்ட ஆட்சியர் நிறைவுறுவாரானால், அவர் 410-BB எனும் பிரிவின்படியான அனுமதியை வழங்குதல் கூடாது.".

## பகுதி IV.

## 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

தமிழ்நாடு சட்டம் 25/1981. **16.** (இதன் பின்பு இந்தப் பகுதியில் 1981–ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் 410–A எனும் பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:— 410-A எனும் பிரிவுக்கு பதிலாக அமைத்தல்.

**"410-A. பொருள் வரையறைகள்.**—இந்த அத்தியாயத்தில்,–

(a) ''விளம்பரப் பலகை'' என்றால் பொது இடமோ அல்லது தனியார் இடமோவான இடம் எதிலும் உள்ள நிலம், கட்டிடம், சுவர் அல்லது கட்டுமானம் எதனின் மீதும் முழுவதுமோ அல்லது ஒரு பகுதியோ நிறுவியமைக்கப்பட்டுள்ளதும், முழுமையாக அல்லது பகுதியாக பொது மக்களின் கண்களுக்குப் புலப்படத்தக்க வகையிலான, சட்டவேலைப்பாடு அல்லது பிற தாங்குப் பொருள் உள்ளடங்கலான விளம்பரத்தைக் காட்சிக்கு வைப்பதற்காகப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தக் கருதப்படும் மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை மற்றும் விளம்பர அட்டைகள் அல்லாத பிற பலகைத் தட்டிகள் எனப் பொருள்படும்.

(b) ''மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை'' என்றால் பொது இடமாகவோ அல்லது தனியார் இடமாகவோவான இடம் எதிலும் விளம்பரம் எதனையுமோ அல்லது திருமணம், சமயச் சடங்கு, பிறந்தநாள் அல்லது இறந்த நாள் குறித்த ஆண்டு விழா, அரசியல், சமய

அல்லது சமுதாய நிறுவனத்தின் கூட்டம் அல்லது மாநாடு தொடர்பான தகவல் எதனையுமோ காட்சிக்கு வைப்பதற்காகப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தக் கருதப்படும், மின்னணு அச்சுத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி வடிவமைத்து அச்சடிக்கப்பட்ட பலகைத் தட்டிகள் எவையும் எனப் பொருள்படும்;

(c) ''விளம்பர அட்டை'' என்றால், பொது இடமாகவோ அல்லது தனியார் இடமாகவோவான இடம் எதிலும் விளம்பரம் எதனையுமோ அல்லது திருமணம், சமயச் சடங்கு, பிறந்த நாள் அல்லது இறந்த நாள் குறித்த ஆண்டு விழா, அரசியல், சமய அல்லது சமுதாய நிறுவனத்தின் கூட்டம் அல்லது மாநாடு தொடர்பான தகவல் எதனையுமோ காட்சிக்கு வைப்பதற்காகப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தக் கருதப்படும், மின்னணு அச்சுத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி வடிவமைத்து அச்சடிக்கப்பட்ட, எட்டு அடி உயரம் நான்கு அடி அகலத்திற்கு மேற்படாத அளவிலான பலகைத் தட்டிகள் எவையும் எனப்பொருள்படும்.''.

410-BB எனும் புதிய பிரிவை புகுத்துதல்.

**17.** 1981-ஆம் ஆண்டுச் சட்டத்தின் 410–B எனும் பிரிவுக்குப் பின்பு பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

***"410-BB. மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகைகளையும் விளம்பர அட்டைகளையும் நிறுவியமைப்பதை முறைப்படுத்துதல்.—***

(1) மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை அல்லது விளம்பர அட்டை எதுவும், நபர் எவராலும் மாவட்ட ஆட்சியரின் முன் அனுமதி பெறாமல் ஆறு நாள்கள் என்பதான கால அளவுக்கு மேற்படாததொரு கால அளவு ஒன்றுக்கு, விளம்பரம் அல்லது தகவல் எதனையும் காட்சிக்கு வைப்பதற்கு நிறுவியமைக்கப்படுதல் கூடாது.

(2) (1)-ஆம் உட்பிரிவின்படியான அனுமதிக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய படிவத்திலும் அத்தகைய விவரங்களைக் கொண்டதாகவும் அத்தகைய கட்டணத்துடனும், மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை அல்லது விளம்பர அட்டை நிறுவப்படும் தேதிக்கு பதினைந்து நாள்களுக்கு முன்னதாக மாவட்ட ஆட்சியரிடம் எழுத்துருவில் செய்யப்படுதல் வேண்டும்.

(3) மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை அல்லது விளம்பர அட்டை நிறுவியமைப்பதற்கான அனுமதியானது மாவட்ட ஆட்சியரால் குறிப்பிடப்படக்கூடிய அத்தகைய நோக்கத்திற்காக ஆறு நாள்கள் என்பதான கால அளவுக்கு மேற்படாத அத்தகைய கால அளவிற்கு அத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு வழங்கப்படலாம்.

(4) மாவட்ட ஆட்சியர், எழுத்துருவில் பதிவு செய்யப்படவேண்டிய காரணங்களுக்காக அனுமதி வழங்க மறுக்கலாம்.

(5) அனுமதியைப் பெற்றதற்குப் பின்னர் மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை அல்லது விளம்பர அட்டை நிறுவியிருக்கிற ஒவ்வொரு நபரும், அத்தகைய அனுமதி முடிவுற்றதன் பேரில் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் மக்கள் நல்வாழ்விற்கும் சுற்றுச்சூழலுக்கும் இன்னல் எதுவும் ஏற்படாத வகையில் அதனை அகற்றி அழித்தல் வேண்டும்.''.

410-E எனும் பிரிவுக்குப் பதிலாக அமைத்தல்.

**18.** 1981–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 410-E எனும் பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

***"410–E. அதிகாரமளிக்கப்படாத விளம்பரப் பலகை, மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை அல்லது விளம்பர அட்டை அகற்றப்படுதல்.***—உரிமம் ஒன்று இல்லாமல், நிறுவியமைக்கப்பட்ட விளம்பரப் பலகை எதுவும் அல்லது அனுமதி ஒன்று இல்லாமல் நிறுவியமைக்கப்பட்ட மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை அல்லது விளம்பர அட்டை எதுவும், அறிவிப்பு எதுவும் கொடுக்காமலேயே மாவட்ட ஆட்சியரால் பறிமுதல் செய்யப்பட்டு அகற்றப்படுதல் வேண்டும்.''.

**19.** 1981–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 410-G எனும் பிரிவில் “விளம்பரப் பலகை” எனும் சொற்றொடர் வருகின்ற நான்கு இடங்களிலும் “விளம்பரப் பலகை அல்லது மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை அல்லது விளம்பர அட்டை” எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். 410-G எனும் பிரிவுக்கான திருத்தம்.

**20.** 1981–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 410–H எனும் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில், ‘‘உரிமமொன்றைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல்’’ என்று வருகின்ற சொற்றொடருக்குப் பின்பு, ‘‘அல்லது அனுமதி வழங்க மறுக்கிற’’ என்னும் சொற்றொடரானது புகுத்தப்படுதல் வேண்டும். 410-H எனும் பிரிவுக்கான திருத்தம்.

**21.** 1981–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 410-I எனும் பிரிவுக்குப் பின்வரும் வரம்புரையானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:— 410-I எனும் பிரிவுக்கான திருத்தம்.

"**வரம்புரை:** ஆனால், மாவட்ட ஆட்சியரின் அனுமதி இல்லாமல் மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை அல்லது விளம்பர அட்டை எதனையும் நிறுவியமைக்கிற எவரொருவரும் ஓர் ஆண்டுக்கு நீட்டிக்கக்கூடிய ஒரு கால அளவிற்கான சிறைத் தண்டனையோ அல்லது ஐந்தாயிரம் ரூபாய் வரை போகக்கூடிய பணத் தண்டனையையோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.”.

**22.** 1981–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 410-J எனும் பிரிவில்,— 410-J எனும் பிரிவுக்கான திருத்தம்.

(1) ஓரத்தலைப்பில் “விளம்பரப் பலகைகள்” என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக “விளம்பரப் பலகைகள், மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகைகள் அல்லது விளம்பர அட்டைகள்” எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) 410–J எனும் பிரிவானது, அந்தப் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவாக மறு எண்ணிடப்படுதல் வேண்டும்;

(3) அவ்வாறு மறு எண்ணிடப்பட்ட (1)–ஆம் உட்பிரிவுக்கு பின்பு பின்வரும் உட்பிரிவானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

“(2) தெருவிலுள்ள போக்குவரத்தில் உள்ளவர்களின் கண்களுக்குப் புலப்படத்தக்க வகையில், மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை அல்லது விளம்பர அட்டை எதனையும் நிறுவி அமைத்ததானது, தாராளமான மற்றும் பாதுகாப்பான போக்குவரத்து ஓட்டத்தைப் பாதகமாகப் பாதிக்கும் வகையில் பாதுகாப்பான போக்குவரத்து இயக்கத்திற்கு இன்னலையும் இடையீட்டினையும் ஏற்படுத்துவதாக இருக்கிறது என மாவட்ட ஆட்சியர் நிறைவுறுவாரானால், அவர் 410-BB எனும் பிரிவின்படியான அனுமதியை வழங்குதல் கூடாது.”.

## பகுதி V

## 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கான திருத்தங்கள்.

**23.** (இதன் பின்பு இந்தப் பகுதியில் 1920–ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 285–A எனும் பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:— 285-A எனும் பிரிவுக்கு பதிலாக அமைத்தல்.

தமிழ்நாடு சட்டம் V/1920.

“**285-A. பொருள் வரையறைகள்.**—இந்த அத்தியாயத்தில்,—

(a) ‘‘விளம்பரப் பலகை’’ என்றால் பொது இடமோ அல்லது தனியார் இடமோவான இடம் எதிலும் உள்ள நிலம், கட்டிடம், சுவர் அல்லது கட்டுமானம் எதனின் மீதும் முழுவதுமோ அல்லது ஒரு பகுதியோ நிறுவியமைக்கப்பட்டுள்ளதும், முழுமையாக அல்லது பகுதியாக பொது மக்களின் கண்களுக்குப் புலப்படத்தக்க வகையிலான, சட்டவேலைப்பாடு அல்லது பிற தாங்குப் பொருள் உள்ளடங்கலான விளம்பரத்தைக் காட்சிக்கு வைப்பதற்காகப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தக் கருதப்படும் மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை மற்றும் விளம்பர அட்டைகள் அல்லாத பிற பலகைத் தட்டிகள் எனப் பொருள்படும்.

(b) ‘‘மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை’’ என்றால் பொது இடமாகவோ அல்லது தனியார் இடமாகவோவான இடம் எதிலும் விளம்பரம் எதனையுமோ அல்லது திருமணம், சமயச் சடங்கு, பிறந்தநாள் அல்லது இறந்த நாள் குறித்த ஆண்டு விழா, அரசியல், சமய அல்லது சமுதாய நிறுவனத்தின் கூட்டம் அல்லது மாநாடு தொடர்பான தகவல் எதனையுமோ காட்சிக்கு வைப்பதற்காகப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தக் கருதப்படும், மின்னணு அச்சுத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி வடிவமைத்து அச்சடிக்கப்பட்ட பலகைத் தட்டிகள் எவையும் எனப் பொருள்படும்;

(c) ‘‘விளம்பர அட்டை’’ என்றால், பொது இடமாகவோ அல்லது தனியார் இடமாகவோவான இடம் எதிலும் விளம்பரம் எதனையுமோ அல்லது திருமணம், சமயச் சடங்கு, பிறந்தநாள் அல்லது இறந்த நாள் குறித்த ஆண்டு விழா, அரசியல், சமய அல்லது சமுதாய நிறுவனத்தின் கூட்டம் அல்லது மாநாடு தொடர்பான தகவல் எதனையுமோ காட்சிக்கு வைப்பதற்காகப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தக் கருதப்படும், மின்னணு அச்சுத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி வடிவமைத்து அச்சடிக்கப்பட்ட, எட்டு அடி உயரம் நான்கு அடி அகலத்திற்கு மேற்படாத அளவிலான பலகைத் தட்டிகள் எவையும் எனப்பொருள்படும்.”.

285-BB எனும் புதிய பிரிவை புகுத்துதல்.

**24.** 1920-ஆம் ஆண்டுச் சட்டத்தின் 285–B எனும் பிரிவுக்குப் பின்பு பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

***“285-BB. மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகைகளையும் விளம்பர அட்டைகளையும் நிறுவியமைப்பதை முறைப்படுத்துதல்.—***

(1) மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை அல்லது விளம்பர அட்டை எதுவும், நபர் எவராலும் மாவட்ட ஆட்சியரின் முன் அனுமதி பெறாமல் ஆறு நாள்கள் என்பதான கால அளவுக்கு மேற்படாததொரு கால அளவு ஒன்றுக்கு, விளம்பரம் அல்லது தகவல் எதனையும் காட்சிக்கு வைப்பதற்கு நிறுவியமைக்கப்படுதல் கூடாது.

(2). (1)-ஆம் உட்பிரிவின்படியான அனுமதிக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய படிவத்திலும் அத்தகைய விவரங்களைக் கொண்டதாகவும் அத்தகைய கட்டணத்துடனும், மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை அல்லது விளம்பர அட்டை நிறுவப்படும் தேதிக்கு பதினைந்து நாள்களுக்கு முன்னதாக மாவட்ட ஆட்சியரிடம் எழுத்துருவில் செய்யப்படுதல் வேண்டும்.

(3) மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை அல்லது விளம்பர அட்டை நிறுவியமைப்பதற்கான அனுமதியானது மாவட்ட ஆட்சியரால் குறிப்பிடப்படக்கூடிய அத்தகைய நோக்கத்திற்காக ஆறு நாள்கள் என்பதான கால அளவுக்கு மேற்படாத அத்தகைய கால அளவிற்கு அத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு வழங்கப்படலாம்.

(4) மாவட்ட ஆட்சியர், எழுத்துருவில் பதிவு செய்யப்படவேண்டிய காரணங்களுக்காக அனுமதி வழங்க மறுக்கலாம்.

(5) அனுமதியைப் பெற்றதற்குப் பின்னர் மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை அல்லது விளம்பர அட்டை நிறுவியிருக்கிற ஒவ்வொரு நபரும், அத்தகைய அனுமதி முடிவுற்றதன் பேரில் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் மக்கள் நல்வாழ்விற்கும் சுற்றுச்சூழலுக்கும் இன்னல் எதுவும் ஏற்படாத வகையில் அதனை அகற்றி அழித்தல் வேண்டும்.”.

285-E எனும் பிரிவுக்குப் பதிலாக அமைத்தல்.

**25.** 1920–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 285-E எனும் பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

***“285–E. அதிகாரமளிக்கப்படாத விளம்பரப் பலகை, மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை அல்லது விளம்பர அட்டை அகற்றப்படுதல்.–*** உரிமம் ஒன்று இல்லாமல், நிறுவியமைக்கப்பட்ட விளம்பரப் பலகை எதுவும் அல்லது அனுமதி ஒன்று இல்லாமல் நிறுவியமைக்கப்பட்ட மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை அல்லது விளம்பர அட்டை எதுவும், அறிவிப்பு எதுவும் கொடுக்காமலேயே மாவட்ட ஆட்சியரால் பறிமுதல் செய்யப்பட்டு அகற்றப்படுதல் வேண்டும்.”.

**26.** 1920–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 285-G எனும் பிரிவில் "விளம்பரப் பலகை" எனும் சொற்றொடர் வருகின்ற நான்கு இடங்களிலும் "விளம்பரப் பலகை அல்லது மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை அல்லது விளம்பர அட்டை" எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். 285-G எனும் பிரிவுக்கான திருத்தம்.

**27.** 1920–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 285–H எனும் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில், ''உரிமமொன்றைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல்'' என்று வருகின்ற சொற்றொடருக்குப் பின்பு, ''அல்லது அனுமதி வழங்க மறுக்கிற'' என்னும் சொற்றொடரானது புகுத்தப்படுதல் வேண்டும். 285-H எனும் பிரிவுக்கான திருத்தம்.

**28.** 1920–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 285-I எனும் பிரிவுக்குப் பின்வரும் வரம்புரையானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:— 285-I எனும் பிரிவுக்கான திருத்தம்.

"**வரம்புரை:** ஆனால், மாவட்ட ஆட்சியரின் அனுமதி இல்லாமல் மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை அல்லது விளம்பர அட்டை எதனையும் நிறுவியமைக்கிற எவரொருவரும் ஓர் ஆண்டுக்கு நீட்டிக்கக்கூடிய ஒரு கால அளவிற்கான சிறைத் தண்டனையோ அல்லது ஐந்தாயிரம் ரூபாய் வரை போகக்கூடிய பணத் தண்டனையையோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.".

**29.** 1920–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 285-J எனும் பிரிவில்,— 285-J எனும் பிரிவுக்கான திருத்தம்.

(1) ஓரத்தலைப்பில் "விளம்பரப் பலகைகள்" என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக "விளம்பரப் பலகைகள், மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகைகள் அல்லது விளம்பர அட்டைகள்" எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) 285–J எனும் பிரிவானது, அந்தப் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவாக மறு எண்ணிடப்படுதல் வேண்டும்;

(3) அவ்வாறு மறு எண்ணிடப்பட்ட (1)–ஆம் உட்பிரிவுக்கு பின்பு பின்வரும் உட்பிரிவானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"(2) தெருவிலுள்ள போக்குவரத்தில் உள்ளவர்களின் கண்களுக்குப் புலப்படத்தக்க வகையில், மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகை அல்லது விளம்பர அட்டை எதனையும் நிறுவி அமைத்ததானது, தாராளமான மற்றும் பாதுகாப்பான போக்குவரத்து ஓட்டத்தைப் பாதகமாகப் பாதிக்கும் வகையில் பாதுகாப்பான போக்குவரத்து இயக்கத்திற்கு இன்னலையும் இடையீட்டினையும் ஏற்படுத்துவதாக இருக்கிறது என மாவட்ட ஆட்சியர் நிறைவுறுவாரானால், அவர் 285-BB எனும் பிரிவின்படியான அனுமதியை வழங்குதல் கூடாது.".

**நோக்க—காரண விளக்கவுரை**

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான சட்டங்களில் ‘‘விளம்பரப் பலகை’’ என்னும் பொருள் வரையறைக்குள் தற்போது மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகைகள் அடங்குகின்றன. மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகைகளும் விளம்பர அட்டைகளும் திட்டவட்டமான நோக்கத்திற்காகவும் குறித்துரைக்கப்பட்ட கால அளவிலும் பயன்படுத்தப்படுவதால், அரசானது, மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகைகளையும் விளம்பர அட்டைகளையும் பொறுத்த அளவில் தனி வகைமுறையொன்றைச் செய்யலாம் எனவும் மின்னணு அச்சு விளம்பரப் பட்டிகைகளையும் விளம்பர அட்டைகளையும் நிறுவியமைப்பதைத் திறம்பட்ட வகையில் முறைப்படுத்துவதன் பொருட்டு, அதிகார அமைப்புகளிடமிருந்து முன் அனுமதியைப் பெறுவது, காட்சிக்கு வைக்கப்படும் கால அளவு, அத்தகைய அதிகாரமற்ற கட்டமைப்புகளை அகற்றுவது, அனுமதி வழங்கப்பட்டிருக்கிற கால அளவானது முடிவுற்றதற்குப் பின்னர் அத்தகைய பொருள்களை பாதுகாப்பான மற்றும் தக்க முறையில் அகற்றி அழிப்பது ஆகியவற்றுக்கான பொருத்தமான வகைமுறைகளை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான சட்டங்களில் செய்யலாம் எனவும் முடிவு செய்துள்ளது. அதற்கிணங்கிய வகையில், மேற்சொன்ன நோக்கத்திற்காக, 1919—ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் IV/1919), 1971—ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 15/1971), 1981—ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 25/1981), 1920—ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் V/1920) ஆகிய சட்டங்களைத் தக்கவாறு திருத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

2. இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**மு.க. ஸ்டாலின்,**
*துணை முதலமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.**

இச்சட்ட முன்வடிவின் 3–ஆம் கூறினால் 1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் IV/1919) புகுத்தக் கருதப்படும் 326-BB எனும் புதிய பிரிவும், 5–ஆம் கூறினால் திருத்தியமைக்கக் கருதப்படும் 326–G எனும் பிரிவும், இச்சட்ட முன்வடிவின் 10–ஆம் கூறினால் 1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 15/1971) புகுத்தக் கருதப்படும் 410–BB எனும் புதிய பிரிவும், 12–ஆம் கூறினால் திருத்தியமைக்கக் கருதப்படும் 410–G எனும் பிரிவும், இச்சட்ட முன்வடிவின் 17–ஆம் கூறினால் 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 25/1981) புகுத்தக் கருதப்படும் 410–BB எனும் புதிய பிரிவும், 19–ஆம் கூறினால் திருத்தியமைக்கக் கருதப்படும் 410–G எனும் பிரிவும், இச்சட்ட முன்வடிவின் 24–ஆம் கூறினால் 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் V/1920) புகுத்தக் கருதப்படும் 285-BB எனும் புதிய பிரிவும், 26–ஆம் கூறினால் திருத்தியமைக்கக் கருதப்படும் 285–G எனும் பிரிவும், அவற்றில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக விதிகளைச் செய்ய அரசுக்கு அதிகாரமளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி, தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

**மு.க. ஸ்டாலின்,**
*துணை முதலமைச்சர்.*

**மா. செல்வராஜ்,**
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.